Q.C. 090

**DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)**

| **Name of the Test:** | Survey Department Test - Sub-Inspector of Survey and Land Records Test - Paper - I (Without Books) | 013 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. Formation of No. of Triangles in Diagonal and Offset System in Based on its ————in the field.
மூலைவிட்ட முக்கோண குத்தளவு முறையில் புலங்களில் அமைக்கப்படும் முக்கோணங்களில் எண்ணிக்கை அதன் ———— ஐ பொறுத்து அமையும்.

(A) No. of subdivisions
உட்பிரிவுகளின் எண்ணிக்கை

(B) No. of sides
பக்கங்களின் எண்ணிக்கை

(C) No. of field junctions
புலசந்திப்புகளின் எண்ணிக்கை

(D) No. of offsets
குத்தளவுகளின் எண்ணிக்கை

2. The Scheme of Survey Work implemented as per G.O.Ms.1177 CT and RE Dept Dated: 30.10.1987 in the Residential Area of Rural Villages is Called ———— Survey.
அரசாணை எண்.1177 வணிகவரி மற்றும் அறநிலையைத்துறை நாள்:30.10.1987-ன்படி கிராமங்களின் குடியிருப்பு பகுதிகளில் நடைமுறை படுத்தப்பட்ட நில அளவை ———— என்றழைக்கப்படுகிறது.

(A) Initial Survey
முதன்மைநில அளவை

(B) Natham Survey
நத்தம் நில அளவை

(C) Hill Villages Resurvey
மலை கிராம மறுநில அளவை

(D) Town Survey
நகரநில அளவை

3. Drawing Pen Used for ____________ Purpose
வரைவு பேனா ———— க்கு பயன்படுத்தப்படுகிறது

(A) Inking Sketches
வரைபடங்களை மையிடுவதற்கு

(B) To Draw Pencil Drawing
பென்சில் வரைபடம் வரைவதற்கு

(C) Writing Subdivision Numbers
உட்பிரிவு எண்களை எழுதுவதற்கு

(D) Measuring Distance
தொலைவுகளை அளவு செய்வதற்கு

4. The Application Received for Transfer of Registry Directly From the Land Owner Shall be Registered in the Accounts in ———— Register.
பதிவுமாறுதல் செய்திடக்கோரி நிலஉரிமையாளர்களிடமிருந்து நேரடியாக வரப்பெற்ற மனுக்களை ———— பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்

(A) No.5 Register
எண்.5 பதிவேடு

(B) No.4 Register
எண்.4 பதிவேடு

(C) No.6(1) Register
எண்.6(1)பதிவேடு

(D) No.6(2) Register
எண்.6(2) பதிவேடு

5. What is the Sub Process No. for Preparation of Preparation of 9(2) Notice with Sketches in Modern Survey as Per Revised Rules in Survey Manual Vol.IV.
திருத்திய வதிகள் அடங்கிய நில அளவை விதி தொகுப்பு IV.ல் உள்ளவாறு நவீன நில அளவையில் 9(2) அறிக்கை வரைபடத்துடன் தயாரித்தல் பணியின் துணை அலுவல் எண் யாது?

(A) Sub Process 18
துணை அலுவல் எண் 18

(B) Sub Process 22
துணை அலுவல் எண் 22

(C) Sub Process 11
துணை அலுவல் எண் 11

(D) Sub Process 17
துணை அலுவல் எண் 17

6. The Equal Mark With Plumed Hole in the Centre has Been Fixed on the Top of the I Class Survey Stone Planted in ____________ Places.
நிலஅளவை கல்லின் தலைப்பகுதியில் நடுவின் பிளமட் குழியுடன் கூடிய சமக்குறி ____________ இடங்களில் நடப்படும் முதல் வகுப்பு கற்களின் மீது பதிக்கப்படுகிறது.

(A) Khandam Theodolite Station
கண்டம் தியோடலைட் நிலையங்கள்

(B) Village Bi-junction Pointer
கிராம சந்திப்பு பாயின்டர்

(C) River Boundary
ஆற்றின் எல்லையில்

(D) Village Trijunction
கிராம முச்சந்திப்பு

7. The land of Which Assesment Has Been Fixed, But the Patta has not Been Granted is Called as
தீர்வை விதிக்கப்பட்டதும் ஆனால் பட்டா யாருக்கும் வழங்கப்படாததுமான நிலம் ____________ என்றழைக்கப்படும்

(A) Poramboke
புறம்போக்கு

(B) Unassessed Waste
தீர்வைவிதிக்கப்படாத தரிசு

(C) Grama Natham
கிராமநத்தம்

(D) Assessed Waste or Anatheenam
தீர்வைவிதிக்கப்பட்ட தரிசு (அ) அனாதீனம்

8. The Stone Fixed by the Forest Department in the Forest Boundary is Called as
வனத்துறையினரால் காட்டின் எல்லைகளில் நடப்படும் தூண்களுக்கு ———————— என்று பெயர்.

(A) Sumaithangi Stones
சுமைத் தாங்கிகற்கள்

(B) G.C.P Point
தரை கட்டுப்பாட்டு புள்ளி

(C) Forest Pillar
காட்டுத் தூண்

(D) C.O.R.S Pillar
சி.ஓ.ஆர்.எஸ் பில்லர்

9. Completion of Survey Work has Been Notified Under Section ———————— of S and B Act.
நிலஅளவை பணி முடிவுற்றது குறித்த அறிவிப்பு நிலஅளவை மற்றும் எல்லைகள் குறித்த சட்டபிரிவு ———————— ன்படி வெளியிடப்படுகிறது.

(A) Section. 13
பிரிவு.13

(B) Section. 9(2)
பிரிவு.9(2)

(C) Section. 5
பிரிவு.5

(D) Section. 17
பிரிவு.17

10. In respect of location and demarcation work, in Modern Survey, what is the percentage of inspection by the Inspector of Survey shall be made?
நவீன நில அளவையில், இடம் காணும் பணி மற்றும் இடம் குறிப்பு பணியில் ஆய்வாளர் மேற்கொள்ள வேண்டிய தணிக்கை சதவீதம் என்ன?

(A) 15%
15.சதவீதம்

(B) 75%
75.சதவீதம்

(C) 30%
30.சதவீதம்

(D) 25%
25.சதவீதம்

11. The survey changes is Taluk office are entered by the
வட்ட அலுவலகத்தில் நில அளவை மாறுதல்கள் ———————— ல் பதிவு செய்யப்படுகிறது.

(A) Taluk Land Records Draughtsman
வட்ட நில ஆவண வரைவளார்

(B) Field surveyor
நில அளவர்

(C) Field Assistant
புல வரைவாளர்

(D) Head Draughtsman
தலைமை வரைவாளர்

12. The Poramboke Lands Such as Streets/Parks/community Centre/ Schools/thopu-etc., are Called as
தெருக்கள்/பூங்காக்கள்/சமுதாய கூடங்கள்/பள்ளிகள்/தோப்புகள் போன்ற புறம்போக்கு நிலங்கள் —————— என்றழைக்கப்படும்.

(A) Unassessed Waste Lands
தீர்வை ஏற்படாத தரிசு நிலங்கள்

(B) Grassing Ground Lands
மேய்க்கால் நிலங்கள்

(C) Communal Poramboke Lands
சமுதாய புறம்போக்கு நிலங்கள்

(D) Anatheenam
அனாதீனம்

13. The Line Measured for Taking Offsets for Field Junctions from the Village and Khandam Traverse line is Called
கிராமம் மற்றும் கண்டம் ஆகியவற்றின் கோண சுற்றிலிருந்து புலமுச்சந்திப்புகளுக்கு எடுக்கப்படும் குத்தளவுகளுக்காக விடப்படும் கோடுகள் —————— எனப்படும்.

(A) Offset line
குத்தளவுகோடு

(B) Purtal line
புர்ட்டால் கோடு

(C) G line
ஜி லைன்

(D) Traverse line
டிராவர்ஸ் கோடு

14. The Booklet Used for Angle Observation During the Traverse Measurement Work is Called as
டிராவர்ஸ் சர்வேயின் போது கோணவாசிப்பிற்காக பயன்படுத்தப்படும் புத்தகம் —————— என்றழைக்கப்படும்.

(A) Adangal Book
அடங்கல் புத்தகம்

(B) Traverse sheet
டிராவர்ஸ் ஷீட்

(C) Field Measurement Book
புலப்படச்சுவடி

(D) B-Field Book
ஆ-புலப்பணிபுத்தகம்

15. The Inspecting Officers are Used —————— Map for Identification of places During their Inspections in the Villages.
கிராமங்களில் தணிக்கை மேற்கொள்ளும் அலுவலர்கள் ஒரு இடத்தை அடையாளம் காண —————— வரைபடத்தினை பயன்படுத்துகின்றனர்.

(A) District Map
மாவட்ட வரைபடம்

(B) Tourist Map
சுற்றுலா வரைபடம்

(C) Village Map
கிராம வரைபடம்

(D) World Atlas
உலக வரைபடம்

16. In land acquisition, after ———— the Sub division Records are Sent to Respective Higher officer
நில எடுப்பு விவகாரத்தில் தயார் செய்யப்படும் உட்பிரிவு ஆவணங்கள் ———— செய்யப்பட்டு, உரிய மேலதிகாரிக்கு அனுப்பப்படுகின்றன.

(A) Pre Scrutiny
முன் கூராய்வு

(B) None of these
இவை ஏதுமில்லை

(C) Final Scrutiny
இறுதி கூராய்வு

(D) Scrutiny
கூராய்வு

17. The Difference Between the Calander year and Fazli year is ———— years.
காலண்டர் ஆண்டிற்கும்,பசலி ஆண்டிற்கும் உள்ள வித்தியாதம் ———— ஆண்டுகள்

(A) 490 years
490 ஆண்டுகள்

(B) 480 years
480 ஆண்டுகள்

(C) 590 years
590 ஆண்டுகள்

(D) 510 years
510 ஆண்டுகள்

18. The G.T-Station Coordinates are Fixed by the Survey of India Based on the ———— Coordinates.
ஜி.ட்டி. நிலைய ஆயப்புள்ளிகள் இந்திய நில அளவை துறையினரால் ———— அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(A) American Database
அமெரிக்க புள்ளிவிவரப்படி

(B) Everest Ellipsoid
எவரெஸ்ட் எலிப்சாய்டு

(C) Village Trijunction
கிராம முச்சந்திப்பு

(D) WGS 84
டபிள்யு.ஜி.எஸ்.84

19. Tamil Nadu Survey Manual Vol-IV Was Written and Compiled by the
தமிழ்நாடு நில அளவை விதி தொகுப்பு IV.ஐ எழுதி தொகுத்தவர்

(A) Dr.R.Kannan, I.A.S.
டாக்டர்.ஆர்.கண்ணன்.இ.ஆ.ப.,

(B) K.A.Mathew, I.A.S.
கே.ஏ.மாத்யு., இ.ஆ.ப.,

(C) Dr.AjayBhattachariya I.A.S.
டாக்டர்.அஜய்பட்டச்சாரியா.இ.ஆ.ப.,

(D) T.N.Subramanian
ட்டி.என்,சுப்பிரமணியன்

20. The Angle from the true north direction is
உண்மையான வடக்கு கோட்டிலிருந்து உண்டாக்கும் கோணம்

(A) Co-Ordinates
ஆயத்தூரங்கள்

(B) Magnetic Bearing
காந்த துருவ கோணம்

(C) Bearing
துருவ கோணம்

(D) True Bearing
உண்மையான துருவ கோணம்

21. The Period of Sun is In the South Direction from the Centre line of the Earth.
சூரியன் பூமத்திய ரேகைக்கு தெற்கு திசையில் சஞ்சரிக்கும் காலம்

(A) From September 21 to March 20.
செப்டம்பர் 21 முதல் மார்ச் 20 வரை

(B) From March 21 to September 20
மார்ச் 21 முதல் செப்டம்பர் 20 வரை

(C) From January 15 to June 15
ஜனவரி 15 முதல் ஜூன் 15 வரை

(D) May 4 to October 3
மே 4 முதல் அக்டோபர் 3 வரை

22. In Modern Town Survey, the Measurement are Recorded with ———— Accuracy
நவீன நகர அளவையில் துல்லியமான அளவிற்கான ———— முறையில் அளவுகள் பதிவு செய்யப்படுகிறது.

(A) Centimeter Accuracy
சென்டிமீட்டர் அளவு துல்லியத்தில்

(B) Milimeter Accuracy
மில்லிமீட்டர் அளவு துல்லியத்தில்

(C) Decimeter Accuracy
டெசிமீட்டர் அளவு துல்லியத்தில்

(D) In Meter Accuracy
மீட்டர் அளவு துல்லியத்தில்

23. The Submission of Annual Periodical of Azimuth Observation is the Duty oldie of the ___________ officers.
சூரிய கோண வாசிப்பு குறித்த ஆண்டறிக்கையினை சமர்பிக்க வேண்டிய பொறுப்புள்ள அலுவலர்கள் ———————— ஆவர்

(A) Sub Inspector of Survey
நில அளவை சார் ஆய்வாளர்

(B) Field Surveyor
நில அளவர்

(C) Inspector and Deputy Inspector of Surveys
நில அளவை ஆய்வாளர் மற்றும் துணை ஆய்வாளர்

(D) Assistant Director of Survey
உதவி இயக்குநர் (நில அளவை)

24. Name of the Survey made for surveying living in village residential areas
கிராமப்புற குடியிருப்பு பகுதிகளை அளவை செய்யும் பொருட்டு நடைபெற்ற நில அளவை

(A) Modern Town Survey
நவீன நகர அளவை

(B) Settlement Survey
நிலவரிதிட்ட நில அளவை

(C) Modern Technical Survey
நவீன தொழில்நுட்ப நில அளவை

(D) Natham Survey
நத்தம் நிலஅளவை

25. Find the perimeter of a triangle with sides 6 m, 4 m, 5 m to
6மீ, 4மீ, 5மீ பக்க அளவுடைய முக்கோணத்தின் சுற்றளவு என்ன?

(A) 120 m
120 மீ

(B) 15 m
15 மீ

(C) 125 m
125 மீ

(D) 25 m
25 மீ

26. ———————— Map is very useful for the Military of India.
இந்திய இராணுவத்திற்கு பெரிதும் பயன்படும் வரைபடம்

(A) Revenue Map
வருவாய் வரைபடம்

(B) State map
மாநில வரைபடம்

(C) Topographical Sketch
ஸ்தல விவர வரைபடம்

(D) Road map
சாலை வரைபடம்

27. The unclaimed land after survey and settlement is termed as
நில அளவை மற்றும் நிலவரிதிட்டம் முடிந்த பின்பும் யாராலும் உரிமை கோரப்படாமல் விடுப்பட்ட புலமானது

(A) Assessed Waste Lands
தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலங்கள்

(B) Anatheenam
அனாதீனம்

(C) UnAssessed Waste Lands
தீர்வை விதிக்கப்படாத தரிசு நிலங்கள்

(D) Poramboke
புறம்போக்கு

28. The Survey Rule Book ____________ is the Defined the Method of Survey to be Used fo Modern Survey Using Modern Survey Instruments.
நில அளவை விதி புத்தகம் ———————— என்பது நவீன நில அளவை கருவிகளை கொண்டு நவீன நில அளவை செய்யும் முறைகள் விவரிக்கின்றது.

(A) Tamil Nadu Survey Manual Vol.IV
தமிழ்நாடு நில அளவை விதி தொகுப்பு - IV

(B) Chain Survey and Land Records Maintenance Manual Part II
சங்கிலி நில அளவை மற்றும் நிலப்பதிவுருக்கள் பேணுகை விதி பாகம் - II

(C) Tamil Nadu Survey Manual Vol.III
தமிழ்நாடு நிலஅளவை விதி தொகுப்பு - III

(D) Tamil Nadu Survey Manual Vol.I
தமிழ்நாடு நில அளவை விதி தொகுப்பு - I

29. Abolition of Zamindari and Conversion into Ryotwari System Was Implemented by the ________ Act
———————— ன் படி ரயத்துகளிடமிருந்து ஜமீன்தாரர்கள் வரிவசூலிக்கும் உரிமை ஒழிக்கப்பட்டது.

(A) Act 26/1963
சட்டம் 26/1963

(B) Act 30/1963
சட்டம் 30/1963

(C) Act 26/1947
சட்டம் 26/1947

(D) Act 26/1948
சட்டம் 26/1948

30. The ___________Table is used for Plotting of Minor Circuit and Major Traverse Sketch.
———————— சிறு சுற்று, பெருஞ்சுற்று அளவுகளை பதிவு செய்து வரைபடம் தயாரிக்க பயன்படுகிறது

(A) Station Table
நிலைய அட்டவணை

(B) Traverse Table
டிராவர்ஸ் அட்டவணை

(C) Ladder Table
குத்தளவு அட்டவணை

(D) Control Table
கட்டுப்பாட்டு அட்டவணை

31. In What head of account to get FMB extract?
புலப்பட நகல் பெற ———————— கணக்குத் தலைப்பில் கட்டணம் செலுத்த வேண்டும்?

(A) 0028LR

(B) 0035LR

(C) 0029LR

(D) 0030LR

32. Notification Given After the Period of ———————— Serving 9(2) notice.
9(2) நோட்டிஸ் கொடுக்கப்பட்ட ———————— கழித்து 13வது விளம்பரம் கொடுக்கப்பட வேண்டும்.

(A) 30 days
30 நாட்கள்

(B) 15 days
15 நாட்கள்

(C) 45 days
45 நாட்கள்

(D) 90 days
90 நாட்கள்

33. After Completion of Town Survey Settlement Revenue Follow up Work, if Error Correction Came to the Notice, it Should be Corrected After Obtained orders from the
நகர வருவாய் பின் தொடர்பணிக்கு பின் பிழைகள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் ———————— ஆணை பெற்று அவை திருத்தம் செய்யப்படும்

(A) Commissioner of Revenue Administration
வருவாய் நிர்வாக ஆணையர்

(B) Settlement Officer
நிலவரித்திட்ட அலுவலர்

(C) Commissioner of Land Administration
நில நிர்வாக ஆணையர்

(D) Director of Survey and Settlement
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர்

34. The Stock Register of Survey Instruments is called also as
நில அளவை கருவிகளின் இருப்பு பதிவேடு —————என்றும் அழைக்கப்படும்.

(A) Stock Register
இருப்பு பதிவேடு

(B) Logistic Register
தளவாட புத்தகம்

(C) Distribution Register
பகிர்மான பதிவேடு

(D) Cash Book
பணப்புத்தகம்

35. Re Survey has to be done once __________ Year.
மறுநில அளவை ————— ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டும்

(A) Thirty
முப்பது

(B) Twenty
இருபது

(C) Fifty
ஐம்பது

(D) Forty
நாற்பது

36. In CollabLand Software by Click ————— Option, able to Draw Field Junction lines.
————— ஐ கிளிக் செய்து வரைபடத்தில் புலமுச்சந்தி கோடுகள் வரையலாம்.

(A) G-Line
சங்கிலி கோடு

(B) Traverese Line
டிராவர்ஸ் கோடு

(C) Fill Line
இணை கோடு

(D) Boundary line
எல்லைக் கோடு

37. In the Town Survey Block Map, the Scale for Drawing the Very Open Pad of Area is
நகர அளவை பிளாக் (மேப்) வரைபடத்தில் திறந்தவெளி பகுதியினை வரைவு செய்யும் அளவு

(A) 1:250

(B) 1:2000

(C) 1:1000

(D) 1:500

38. The Survey and Boundaries Act VIII of 1923 Contains Rules ————— Sections.
1923-ஆம் வருட நில அளவை மற்றும் எல்லைகள் குறித்தசட்டம் VIII ————— பிரிவுகளை கொண்டதாகும்.

(A) 16 Sections
16 பிரிவுகள்

(B) 35 Sections
35 பிரிவுகள்

(C) 21 Sections
21 பிரிவுகள்

(D) 27 Sections
27 பிரிவுகள்

39. What is the Side Measurement if the Area of Square Shape Field is 4,43,556. square Meter.
ஒரு சதுர வடிவ பலத்தின் பரப்பளவு 4,43,556. சதுர மீட்டர் எனில் அதன் பக்க அளவுகள் என்ன?

(A) 544 Meter
544 மீட்டர்

(B) 720 Meter
720 மீட்டர்

(C) 666 Meter
666 மீட்டர்

(D) 309 Meter
309 மீட்டர்

40. Which is Place, if the Stone Found With Plus Mark on the Top?
தலையில் கூட்டல் குறியுடன் காணப்படும் நில அளவைக்குறி அமைந்துள்ள இடம் எது?

(A) Field Junction Points in the Village
கிராம எல்லைக்கோட்டில் உள்ள புல முச்சந்திப்பு

(B) Poramboke Bend Points in the Field
புல எல்லையில் உள்ள புறம்போக்கு வளைவு

(C) Theodolite Station Points in the Kandum Boundary
கண்டம் எல்லையில் உள்ள தியோடலைட் நிலையம்

(D) Field Junction Points in the Kandum Boundary
கண்டம் எல்லையில் உள்ள புல முச்சந்திப்பு

41. The Sub Process No ———— is the Preparation Final Verification Report in initial survey.
முதன்மை நில அளவையில் இறுதி ஆய்வு அறிக்கை தயாரிக்கும் பணியின் துணை அலுவல் எண் ———— ஆகும்.

(A) Sub Process : 74
துணை அலுவல் எண் : 74

(B) Sub Process : 73
துணை அலுவல் எண் : 73

(C) Sub Process : 55
துணை அலுவல் எண் : 55

(D) Sub Process : 71
துணை அலுவல் எண் : 71

42. Surveying is Used to Determine the Precise Position of Control Stations on the Surface of Earth.
கட்டுப்பாட்டு நிலையங்களில் அதன் துல்லியத்தை அளவிட ———— அளவிடும் முறை பயன்படுத்தப்படுகிறது.

(A) Geodetic
ஜியோட்டிக்

(B) Plane
பிளான்

(C) Archological
தொல்லியம் துறை

(D) Military
ராணுவம்

43. The Pay and Allowance of Town Sub Inspector of Survey are Drawn and Paid by the
நகர சார் ஆய்வாளரின் ஊதியம் மற்றும் படிகள் ———————— ஆல் பட்டியலிட்டு வழங்கப்படுகிறது.

(A) Block Development Officer
வட்டார வளர்ச்சி அலுவலர்

(B) Municipal Commissioner
நகராட்சி ஆணையாளர்

(C) Tahsildar
வட்டாட்சியர்

(D) Assistant Director
உதவி இயக்குநர்

44. When a Quadrilateral Figure With its Two Sides Parallel and Two of its Angle Right Angles is Called
இரு பக்கங்கள் இணையானவையாகவும், இரு கோணங்கள் செங்கோணங்களாகவும் கொண்ட ஒரு நாற்கர உருவம் ———————— என்றழைக்கப்படும்.

(A) Sylinder
உருளை

(B) Trapezoim
டிரப்பீசியம்

(C) Triangle
முக்கோணம்

(D) Rectangle
செவ்வகம்

45. Why The Restriction of Length in Offsets Should be Followed?
குத்தளவு எடுக்க தூர கட்டுப்பாடு ஏன் பின்பற்றப்பட வேண்டும்

(A) For accuracy
துல்லியமான அளவு செய்ய

(B) For Reduce Measurement Timing
அளவிடும் நேரத்தை குறைக்க

(C) For Plotting Reasons
வரைதல் காரணத்திற்காக

(D) For clear vision
தெளிவான பார்வைக்காக

46. The Broad Arrow Cut on All Stones Should be at Least ———————— Long and ————————Deep.
நிலஅளவை கற்களில் பதிக்கப்படும் அம்புகுறி குறைந்தபட்சம் ———————— அளவுள்ளதாக இருக்க வேண்டும்

(A) 20.Cm Long and ½ Cm Deep
20.செமீ நீளம் மற்றும் ½ செமீ ஆழம்

(B) 10.Cm Long and ½ Cm Deep
10.செமீ நீளம் மற்றும் ½ செமீ ஆழம்

(C) 6.Cm Long and ½ Cm Deep
6.செமீ நீளம் மற்றும் ½ செமீ ஆழம்

(D) 15.Cm Long and ½ Cm Deep
15.செமீ நீளம் மற்றும் ½ செமீ ஆழம்

47. The Following Number of Items of Records to be Sent to the Central Survey Office on Completion of Town Survey Work.
நகர அளவை முடிவுற்றதும் ———————— ஆவணங்கள் மத்திய நில அளவை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கபட வேண்டும்

(A) 10 items
10 வகையான

(B) 13 items
13 வகையான

(C) 16 items
16 வகையான

(D) 15 items
15 வகையான

48. Universal Transverse Mercator Projection System in Now Being Used India after the
யுனிவரஸல் டிரான்ஸ்வர்ஸ் மெர்கேட்டர் புரஜெக்ஷன் முறை இந்தியாவில் ———————— பிறகு தற்பொழுத பயன்படுத்தப்படுகிறது.

(A) A Twenty Point Plan-2005
இருபது அம்ச திட்டம் - 2005

(B) New Education Policy
புதிய கல்வி கொள்கை

(C) Five Year Plan
ஐந்தாண்டு திட்டம்

(D) New National Map Policy-2005
புதிய தேசிய வரைபட கொள்கை 2005

49. Who is Take Decision Under Section 9(1) of S and B Act?
நில அளவை மற்றும் எல்லைகள் குறித்து குறித்த சட்டம் பிரிவு 9(1)-ன் கீழ் முடிவெடுக்கும் அதிகாரம் உள்ளவர் யார்?

(A) Thasildar
வட்டாட்சியர்

(B) Deputy Inspector
துணை ஆய்வாளர்

(C) Deputy Tahsildar
துணை வட்டாட்சியர்

(D) Inspector
ஆய்வாளர்

50. The Process of Surveying a field which has been Surveyed already is known as
நில அளவை செய்யப்பட்ட பகுதியை மீண்டும் நில அளவை செய்வது ———————— ஆகும்.

(A) Initial Survey
முதல் நில அளவை

(B) Street Survey
தெரு நில அளவை

(C) Topographical Survey
ஸ்தல விவர நில அளவை

(D) Re - Survey
மறு நில அளவை

51. Proportional Fraction Between Actual Field Measurement, Size and Scale of Drawing is Called as
புலத்தின் பூமியில் உள்ள அளவுகள் மற்றும் அமைப்பிற்கு ஈடாக வரைபடத்தில் வரையப்படும் அளவுக்கு உள்ள விகிதாச்சார பின்னம் ———— எனப்படும்

(A) Representative Fraction
பிரதிநிதித்துவ பின்னம்

(B) Perpendicular
உயரம்

(C) Hypotenuse
கர்ணம்

(D) Angle
கோணம்

52. Town Survey Blocks are
நகர அளவை பிளாக்குகள் என்பது

(A) Close/Medium/Open Blocks
நெருக்கமான/சுமாரான/திறந்தவெளி பிளாக்குகள்

(B) Waste Blocks
தரிசு பிளாக்குகள்

(C) Wet Blocks
நஞ்சை பிளாக்குகள்

(D) Dry Blocks
புஞ்சை பிளாக்குகள்

53. For the Purpose of Calculation of Area ______________ Has Been Used.
பரப்பளவு கணக்கிட ———— பயன்படுத்தப்படுகிறது.

(A) Diagonal Scale
மூலைவிட்ட அளவு கோல்

(B) Plotting Scale
வரைவு அளவுகோல்

(C) Computing Scale
கணக்கீட்டு அளவு கோல்

(D) Vernier Scale
வெர்னியர் அளவுகோல்

54. How Many years of Uninterrupted Enjoyment Shall be Considered for Patta Transfer without Tittle Document as Per R.S.O.31.
நில உரிமை பத்திரங்கள் இன்றி தடையற்ற அனுபவத்தின் அடிப்படையில் பட்டா மாற்றத்திற்கு அனுசரிக்கப்பட வேண்டிய அனுபவ காலம்.

(A) 12 Years
12 ஆண்டுகள்

(B) 30 Years
30 ஆண்டுகள்

(C) 15 Years
15 ஆண்டுகள்

(D) 50 Years
50 ஆண்டுகள்

55. In Modern Town Survey the Close Block Shall be Plotted to the Scale of
நவீன நகர அளவை நெருக்கமான பகுதி பிளாக் வரைபடங்கள் ———————— அளவு கோலுக்கு வரையப்பட வேண்டும்

(A) 1mm :1000mm
1 மிமீ : 1000 மிமீ

(B) 1mm :2000mm
1மிமீ : 2000 மிமீ

(C) 1mm :500mm
1 மிமீ : 500 மிமீ

(D) 1mm :250mm
1மிமீ : 250 மிமீ

56. The Name of Statement form Prescribed in Appendix VII to the Par-13(a) of Chapter I of Chain Survey and Land Records Manual Part.II is Called as
சங்கிலி அளவை மற்றும் நிலப்பதிவுருக்கள் விதி தொகுப்பு பாகம் II அத்தியாம். I பத்தி 13(ஏ)-ன்படி இணைப்பு VII-ல் உள்ள படிவம் ———————— எனப்படும்

(A) Demand Notice
கேட்பு பட்டியல்

(B) Sub Division Statement
உட்பிரிவு ஸ்டேட்மெண்ட்

(C) Progress Statement
பணி முன்னேற்ற அறிக்கை

(D) Expenditure Statement
செலவின அறிக்கை

57. In Land Surveying, What Does GIS Stand for?
ஜி.ஐ.எஸ். என்பது நில அளவையில் எதை குறிக்கிறது?

(A) Geodetic information service
புவிசார்ந்த தகவல் பணி

(B) Geographic Information System
புவியியல் தகவல் முறை

(C) Geographic infrastructure service
புவியியல் கட்டுமான பணி

(D) Geological investigation System
புவியியல் புலானாய்வு முறை

58. The Proposals With the Forms-XIV, XV for Area Error are to be Sent to ———————— Officer.
பரப்பு பிழைக்குரிய படிவம் - XIV, XV தயார் செய்து முன்மொழிவுகளை எந்த அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

(A) Municipal Commissioner
நகராட்சி ஆணையாளர்

(B) Block Development Officer
வட்டார வளர்ச்சி அலுவலர்

(C) District Revenue officer
மாவட்ட வருவாய் அலுவலர்

(D) Revenue Divisional Officer
வருவாய் கோட்ட அலுவலர்

59. The Areas Covered by Hills, Rocks, of Which Survey Stones Have Not Been Able to Plant the Survey Stones in the Field Junction Points, __________ Has Been Fixed.
கற்கள் நடமுடியாத அளவிற்கு உள்ள மலைகள் மற்றும் பாறைகளால் சூழப்பட்ட புல சந்திப்பு இடங்களில் ———————— பதிக்கப்படுகிறது.

(A) Round Mark
வட்ட குறி

(B) Tri Angle Mark
முக்கோண குறி

(C) Plus Marks
கூட்டல் குறி

(D) Rock Mark
பாறை குறி

60. The Great Trigonometrical Survey work was Started by the
தேசிய பெரிய முக்கோண நில அளவைப்பணி ———————— என்பவரால் துவக்கப்பட்டது.

(A) Sir.George Everest
சர்.ஜார்ஜ் எவெரஸ்ட்

(B) Major. William Lampton
மேஜர்.வில்லியம் லாம்டன்

(C) James Rannel
ஜேம்ஸ் ரேனல்

(D) Lord Robbert Clive
லார்டு. ராபர்ட் கிளைவ்

61. The Survey Stone Planted, Not More Than __________ of its Length Should be Visible Above the Ground.
நில அளவை கற்கள் நடப்படும் பொழுது அதன் அளவில் ———————— பங்கிற்கு மேல் தரைக்கு மேலே தெரியும்படி நடுதல் கூடாது.

(A) Two fourth
நான்கில் இரு பங்கு

(B) Two Third
மூன்றில் இரு பங்கு

(C) One Fourth
நான்கில் ஒரு பங்கு

(D) One Third
மூன்றில் ஒரு பங்கு

62. What is Metadata?
மெட்டா டேட்டா என்பது என்ன?

(A) Information about an object
பொருள் சார்ந்த தகவல்

(B) Data formet for Unix
யுனிக்ஸ் தகவல் பதிவு

(C) Graphical Data
வரைபட தகவல் பதிவு

(D) Data format of Arc/Info
ஆர்க்/இன்போ தகவல் அமைப்பு

63. When a formation of triangles in the Survey fields, the diagonal line should not be
நில அளவை புலத்தின் அமைக்கப்படும் முக்கோணத்தில் அதன் மூலைவிட்டக் கோடுகள் ———————— ஆக இருக்க கூடாது.

(A) Equal
சமமாக

(B) Crossed each other
ஒன்றுக்கொன்று குறுக்கிடக்கூடாது

(C) Similar
ஒரே மாதிரியாக

(D) Parallel
இணையாக

64. In a second appeal in the Transfer of Registry cases, on the orders in first appeal, the orders have been passed by the
பதிவு மாறுதல் தொடர்பான முதல் மேல்முறையீட்டு மனுக்களின் மீது செய்யப்படும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது ———————— ஆல் உத்திரவிடப்படுகிறது.

(A) District Revenue officer
மாவட்ட வருவாய் அலுவலர்

(B) Tahsildar
வட்டாட்சியர்

(C) Deputy Tahsildar
துணை வட்டாட்சியர்

(D) Revenue Divisional Officer
வருவாய் கோட்ட அலுவலர்

65. The average length of all the solar days of the year is called as.
ஆண்டு முழுவதும் உள்ள சூரிய நாளின் சராசரி ———————— எனப்படும்

(A) Zenith Distance
ஜெனித் தூரம்

(B) The Declination
டெக்னிலேசன்

(C) Equation Time (or) Mean Time
சராசரி நேரம்

(D) Meridian
மெரிடியன்

66. Parallel Ruler used for ———————— Purpose.
இணைகர ரூலர் ———————— க்கு பயன்படுத்தப்படுகிறது

(A) Bearing Plotting
துருவ கோண வரைபடம் வரைவதற்கு

(B) Inking Sketches
வரைபடங்களை மையிடுவதற்கு

(C) Measuring distance
தொலைவுகளை அளவு செய்வதற்கு

(D) Comparing Measurement
அளவுகளை சரிபார்ப்பதற்கு

67. The Prompt Entry of all Changes in the Boundaries to Town Survey Field and important TOPO Graphical Details are Made in Revenue Maps by
நகரபுலங்களில் எல்லைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் ஸ்தலவிவர விவரங்களை பதிவு செய்து வருவாய் வரைபடங்கள் ———————— ஆல் தயாரிக்கப்படுகின்றன.

(A) Maintenance Field Surveyor
பராமரிப்பு குறுவட்ட அளவர்

(B) Town Surveyor
நகர அளவர்

(C) Head Surveyor
தலைமை அளவர்

(D) None of the Above
இவற்றில ஏதுமில்லை

68. Finalization of a Survey of a Portion was Notified Under Section 13 in Gazette.
நில அளவை முடிவுற்றமைக்கான இறுதி விளம்பரமான 13-வது பிரிவு விளம்பரம் ———————— அரசிதழில் வெளியிடப்படுகிறது.

(A) District Gazette
மாவட்ட அரசிதழ்

(B) Taluk Gazette
வட்ட அரசிதழ்

(C) Tamilnadu Gazette
தமிழ்நாடு அரசிதழ்

(D) Village Gazette
கிராம அரசிதழ்

69. In every year G.T.Station is inspected by Deputy Inspector of Survey and send the Report to.
ஒவ்வொரு வருடமும் பெரிய முக்கோண நிலையம் வட்டத்துணை ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டு ———————— க்கு அறிக்கை அனுப்பப்பட வேண்டும்

(A) Special Tahsildar
தனிவட்டாட்சியர்

(B) Deputy Collector
துணை ஆட்சியர்

(C) Tahsildar
வட்டாட்சியர்

(D) Collector
ஆட்சியர்

70. In Azimuth the Direction of the Sun From March 21st to September 20th is
அஸிமத் கணக்கீட்டில் மார்ச் 21 முதல் செப்டம்பர் 20 வரையில் சூரியனின் திசை.

(A) North
வடக்கு

(B) South
தெற்கு

(C) East
கிழக்கு

(D) West
மேற்கு

71. GPS-Position of any Place, Object or Point Can be Represented by Means of its ———————— Co-Ordinates.
ஒரு இடத்தின் பொருளின் புள்ளியின் GPS - என்பது ———————— கோ-ஆர்டினேட்ஸ் கொண்டு குறிக்கப்படுகிறது.

(A) Metrological
வானியல்

(B) Historical
வரலாற்று

(C) East Meridian
மெரிடியன்

(D) Geographical
புவியியல்

72. In ———————— of the Following, each 'foot' of Land is Valuable.
கீழ்கண்ட அளவையில் ஒவ்வொரு அடி நிலமும் மதிப்பு மிக்கது

(A) Street Survey
தெரு அளவை

(B) Town Survey
நகரஅளவை

(C) Natham Survey
நத்தம் அளவை

(D) Modern Technical Survey
நவீன தொழில்நுட்ப அளவை

73. In The Length of the Chain Should be Tested in
சங்கிலியின் நீளத்தை ———————— சோதிக்கப்படவேண்டும்.

(A) Daily Before Measurement
தினசரி அளவைக்கு முன்பாக

(B) Daily After Measurement
தினசரி அளவைக்கு பின்பாக

(C) Once in a week
வாரம் ஒருமுறை

(D) Once in a Month
மாதம் ஒரு முறை

74. Jamabandi Check in Taluk Office Will Conducted Once in a
வட்ட அலுவலகத்தில் வருவாய் தீர்வாயம் ———————— க்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.

(A) Academic Year
கல்வி ஆண்டு

(B) None of the above
இவற்றில் ஏதுமில்லை

(C) Fasali Year
பசலி ஆண்டு

(D) Financial Year
நிதி ஆண்டு

75. Map Showing Natural Futures like Rivers, Streams, Hills etc are known as
இயற்கை கூறுகளான ஆறுகள், ஓடைகள், மலைகள், போன்றவற்றை காட்டும் வரைபடம்.

(A) Cadastrial maps
வருவாய் வரைபடம்

(B) Road maps
சாலை வரைபடம்

(C) Plans
திட்டங்கள்

(D) Topographical Map
ஸ்தலவிவர வரைபடம்

76. Grass Field is a Type of
புற்கள் அடர்ந்த புலம் ———————— வகை புலம்.

(A) Patta Field
பட்டா புலம்

(B) Poramboke
புறம்போக்கு

(C) Traverse Circuit
டிராவர்ஸ்

(D) Minor Circuit
சிறு சுற்றுப்புலம்

77. In a 20 Meter Chain, One Link is
20 மீட்டர் சங்கிலியில் ஒரு லிங்க் என்பது ———————— .

(A) 0.3 M
0.3 மீ

(B) 0.002 M
0.002 மீ

(C) 20 cm
20 செ.மீ

(D) 0.003 m
0.003 மீ

78. Write the Abbreviation or RTCM
RTCM விரிவாக்கம் என்ன?

(A) Radio Tactical Commission for Maritime Service
கடல் சார் பணிகளுக்காக ரேடியோ டேக்டிகல் கமிஷன்

(B) Radio Technical Commission for Maritime Service
கடல் சார்ந்த பணிகளுக்கான ரேடியோ தொழில்நுட்ப கமிஷன்

(C) Radar Technology Commission for Maritime Service
கடல் சார்ந்த பணிகளுக்கான ரேடார் தொழில்நுட்ப கமிஷன்

(D) Radar Technique Commission for Service
கடல் சார் பணிகளுக்கான ரேடார் நுட்ப கமிஷன்

79. The G.T.Survey Was Started in Which of the Following Places?
G.T. சர்வே பின்வரும் எந்த இடத்தில் தொடங்கப்பட்டது?

(A) St.George Fort Trichy
புனித ஜார்ஜ் கோட்டை திருச்சி

(B) St.Thomas mount Vellore
புனிததாமஸ் மவுண்ட் வேலூர்

(C) St.George Fort Madras
புனித ஜார்ஜ் கோட்டை சென்னை

(D) St.Thomas mount Madras
புனிததாமஸ் மவுண்ட் சென்னை

80. The Cost of Demarcation Should be Collected From the
கல் கிரையம் யாரிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது

(A) Registered Holder of the Field
பதிவு செய்யப்பட்ட நில உரிமையாளர்

(B) Surveyor
நில அளவர்

(C) Revenue Tahsildar
வருவாய் வட்டாட்சியர்

(D) Assistant Director of Survey
நில அளவை உதவி இயக்குநர்

81. The Angle Between the Line and Meridian is Called
கோட்டிற்க்கும் மெரிடியனுக்கும் இடைப்பட்ட கோணம் ———————— எனப்படும்.

(A) Distance
தூரம்

(B) Bearing
பேரிங்

(C) Sums
கூடுதல்

(D) Drientation
டிரியன்டேசன்

82. Which of the following instrument can measure the depth of Seabed?
கடல் மட்டத்தின் ஆழத்தை அளக்க உதவும் கருவி எது?

(A) Theodolite
கோணமானி

(B) Chain
சங்கிலி

(C) Echo Sounder
ஒலி பிரதிபலிப்பான்

(D) G.P.S
ஜி.பி.எஸ்

83. Before Starting Survey _______________ is Prepared and Marked.
நில அளவை செய்வதற்க்கு முன்பாக ———————— தயாரித்து குறியிட வேண்டும்.

(A) Location Sketch
இடம் காணும் வரைபடம்

(B) Town Survey Map
நகர அளவை வரைபடம்

(C) Topographical Map
டோபோகிராபிகல் வரைபடம்

(D) Index Map
குறியீட்டு வரைபடம்

84. In the Front Page of the A-Register ———————— Will be Furnished.
"அ" பதிவேட்டில் முன் பக்கத்தில் ———————— பதியப்பட்டிருக்கும்.

(A) Classifications
வகைப்பாடுகள்

(B) Land Owner Details
பட்டாதாரர் விவரங்கள்

(C) Historical Note
வரலாற்று குறிப்பு

(D) Survey Field Details
புல எண்கள் விவரங்கள்

85. What is the First process during temporary adjustment of Theodolite?
தியோடலைட் பணியின் போது கையாளப்படும் முதல்நிலை ஏது?

(A) Subdivision Work
உட்பிரிவு பணி

(B) Centring
மையப்படுத்தல்

(C) Equalisation
வரப்பை சமன்படுத்தல்

(D) Location work
இடம் காணும் பணி

86. In Which Section, the Notice to be given to Ryots missing stone?
காணாமற்போன கற்களுக்கான எந்த பிரிவு அறிவிக்கை ரயத்துகளுக்கு வழங்கப்படுகிறது.

(A) 9(1) Notice
9(1) அறிக்கை

(B) 4 Notice
4 அறிக்கை

(C) 10 (1) Notice
10(1) அறிக்கை

(D) 15 (2) Notice
15(2) அறிக்கை

87. During Change of Classification in Maintenance Work, a New Sub-division should be Denoted in Continuation With
பராமரிப்பு பணியில் வகைப்பாடு மாறுதல் உட்பிரிவின் போது புதிய உட்பிரிவு எண்ணாணுத — ———————— என வழங்கப்படும்

(A) Any Survey No
ஏதாவது புல எண்

(B) Next to last Subdivision No
கடைசி புல உட்பிரிவு எண்ணுக்கு அடுத்த உட்பிரிவு எண்

(C) Second Subdivision No
இரண்டாவது உட்பிரிவு எண்

(D) Any Subdivision No
ஏதாவது உட்பிரிவு எண்

88. During the Town Survey, the ____________ Line Measurement has been Recorded for the Refixing of Survey Stones Planted Under the Ground.
நகர அளவையில் பூமிக்கு அடியில் நடப்படும் நிலஅளவை கற்களை மறு நிர்ணயம் செய்ய ———————— கோடு அளவுகள் பதிவு செய்யப்படுகிறது.

(A) Tie Line
டை லைன்

(B) G-Line
சங்கிலி கோடு

(C) Offset
குத்தளவு

(D) Traverse Line
டிராவர்ஸ் கோடு

89. The permanent details in the field map are used.
புலப்படத்தில் காட்டப்பட்டுள்ள நிரந்தர விளக்கிகளானது

(A) To Collect Land Revenue
நிலவரி வசூலிக்க

(B) To Prove the Land Owner's Right
நில உடைமையாளரின் உரிமையை நிலை நாட்ட

(C) To Mapping the Survey Field
புலப்படம் வரைவதற்கு

(D) To Identify the Field
நிலத்தை அடையாளம் காண

90. What is the Square Root of the number 35721?
35721-ன் வர்க்க மூலம் என்ன?

(A) 198

(B) 189

(C) 589

(D) 591

91. The ______________ Table is Used for Entering side Survey Numbers.
வரைபடத்தில் பக்க புலண்களை குறிக்க ———————— பயன்படுகிறது.

(A) Adjacency Table
பக்க அட்டவணை

(B) Control Table
கட்டுப்பாட்டு அட்டவணை

(C) Extended Table
விரிவு அட்டவணை

(D) Boundary Table
எல்லை அட்டவணை

92. The Circuit Having an Extent from 100 Sq.Mile to 150 Miles is called as
100 முதல் 150 சதுர மைல் பரப்பு உள்ள பகுதிகளை அடக்கிய பெரும் பகுதி

(A) Village Circuit
கிராம சுற்று

(B) Minor Circuit
சிறு சுற்று

(C) Major Circuit
மெயின் சுற்று

(D) Kandam Circuit
கண்டம் சுற்று

93. What is the Register maintained of classification changes in Taluk office?
வட்ட அலுவலகத்தில் வகைபாடு மாறுதல் பதிவேடு எண்

(A) Register No.4
4 ம் பதிவேடு

(B) Register No.5
5 ம் பதிவேடு

(C) Register No.8A
8A பதிவேடு

(D) Register No.7
7 ம் பதிவேடு

94. In Respect of Location and Demarcation Work in Modern Survey, What is the Percentage of Inspection by the Assistant Director of Survey Shall be Made?
நவீன நில அளவையில், இடம் காணும் பணி மற்றும் இடம் குறிப்பு பணியில் உதவி இயக்குநர் மேற்கொள்ள வேண்டிய சதவீதம் என்ன?

(A) 15%
15%

(B) 5%
5%

(C) Random check
அங்கொன்றும் இங்கொன்றுமாக

(D) 10%
10%

95. The size of 'B' stone is
"ஆ" கற்களின் அளவு ————————

(A) 60 cm × 15 cm × 15 cm
60 செமீ × 15 செமீ × 15செமீ

(B) 30 cm × 15 cm × 15 cm
30 செமீ × 15 செமீ × 15 செமீ

(C) 90 cm × 22.5 cm × 22.5 cm
90 செமீ × 22.5 செமீ × 22.5 செமீ

(D) 90 cm × 15 cm × 15 cm
90 செமீ × 15 செமீ × 15செமீ

96. Name of the Registry that Specifies the Current Field Numbers and Subdivisions Equivalent to Each old Field Number
ஒவ்வொரு பழைய புலஎண்ணுக்குனும் சமமான தற்போதைய புலஎண்களையும் உட்பிரிவுகளையும் குறிப்பிடும் பதிவேட்டின் பெயர்

(A) Analogy Statement
ஒப்புமை குறிப்பேடு

(B) Stock Register
இருப்பு பதிவேடு

(C) Taluk 'A' Register
வட்ட "அ" பதிவேடு

(D) Correlation Statement
தொடர்பு விளக்க குறிப்பேடு

97. The Size at Which a Village Map is Drawn
ஒரு கிராம வரைபடம் வரையப்படும் அளவு

(A) 1:10000 mm (or) 1:20000 mm
1 : 10000 மிமீ (அ) 1 : 20000 மிமீ

(B) 1:1000 mm (or) 1:2000 mm
1 : 1000 மிமீ (அ) 1 : 2000 மிமீ

(C) 1:5000 mm (or) 1:10000 mm
1 : 5000 மிமீ (அ) 1 : 10000 மிமீ

(D) 1:2000 mm (or) 1:5000 mm
1 : 20000 மிமீ (அ) 1 : 5000 மிமீ

98. During the Settlement Operation, the Proposal for Creation of New Subdivision is Called
நிலவரித்திட்ட நடவடிக்கையின் போது புதிய உட்பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான முன்மொழிவுகள் ———— என்றழைக்கப்படும்

(A) A2 Proposal
ஏ2 முன்மொழிவு

(B) A3 Proposal
ஏ3 முன்மொழிவு

(C) Area Correction proposal
பரப்பளவு திருத்த முன்மொழிவு

(D) A1 Proposal
ஏ1 முன்மொழிவு

99. The Village and kandum Boundary has Been Refixed by Using ________ Instruments in Modern Survey.
நவீன நில அளவையில் கிராம மற்றும் கண்ட எல்லைகள் எந்த உபகாரணம் கொண்டு மறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

(A) Circumbrinder
சர்கம்பிரைன்டர்

(B) Everest Theodolite
எவரெஸட் தியோடலைட்

(C) Transit Theodolite
டிரான்சிட் தியோடலைட்

(D) GPS & Total station
ஜி.பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேசன்

100. The Survey boundary notified under section-13 can be modified by an order in the Appeal Within the Period of
13-ஆம் பிரிவின்படி அறிவிக்கப்பட்ட நில அளவை எல்லையினை மேல்முறையீட்டில் உத்தரவு வழங்கப்படுவதன் மூலம் ———————— மாற்றியமைக்கலாம்.

(A) Three years
மூன்று ஆண்டுகளுக்குள்

(B) One year
ஒரு ஆண்டுகளுக்குள்

(C) Five years
ஐந்து ஆண்டுகளுக்குள்

(D) Two years
இரண்டு ஆண்டுகளுக்குள்